கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்." (யோவான் 20:19,20)

"நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது." யோவான் 15:5

### ஏழாம் படி

**ஆண்டவருக்கு ஊழியம் செய்ய உன்னை ஒப்புக்கொடுத்து விடு. ஜெபம் பண்ணு, வேதத்தை வாசி, சாட்சி சொல்லு.**

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்." (யோவான் 14:13)

"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவான் 8:31, 32)

"இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன். யோவான் 20:21

## ஜெபம்

எங்கள் பரலோகப் பிதாவே, நான் பாவம் செய்தேனென்றும், உமது மன்னிப்பு எனக்குத் தேவை என்பதையும் அறிந்து கொண்டேன். உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து எனக்காகச் சிலுவையில் மரித்தார் என்பதை நம்புகிறேன். என் பாவங்களினிமித்தம் மனந்திரும்பி, அவைகளிலிருந்து திரும்ப விரும்புகிறேன். விசுவாசத்தினாலே, ஆண்டவராகிய இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு என் வாழ்க்கையிலும் வரும்படி அழைக்கிறேன். மேலும் உமது கிருபையினாலே, என் வாழ்வின் ஆண்டவரான உமக்குக் கீழ்ப்படியவும் உம்மைப் பின்பற்றவும் மனதுள்ளவனாய் இருக்கிறேன், ஆமென்.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"
- யோவான் 3:16

**விநியோகிப்பவர் முகவரி**

HOW TO KNOW GOD (Tamil)

*எங்கள் முகவரி:*

**இந்திய வேதாகம இலக்கியம் (IBL)**

67, பெராக்கா சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

Phone : 044 26425166 / 26420077
Email : *ibl.maa@iblchennai.org*
Website: www.iblministries.in



# தேவனை அறிந்து கொள்வது எப்படி?

# தேவனை அறிந்துகொள்வது எப்படி?

## முதல் படி
**தேவன் உன்னை நேசிக்கிறார் என்று அறிந்துகொள்**

“தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” (யோவான் 3:16)
“ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.” (யோவான் 17:3.)
பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல, நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்” (யோவான் 15:9)

## இரண்டாம் படி
**உனக்கு உதவி தேவைப்படுகிறது என்பதை ஒத்துக்கொள்.**

“ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.” (யோவான் 3:19)
“ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள்.” (யோவான் 8:24).
“அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று” யோவான் 3:18.

## மூன்றாம் படி
**இயேசு ஒருவரே இரட்சகர் என்பதை விசுவாசி**

“இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” யோவான் 1:29.இயேசு, நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” யோவான் 14:6
“குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன், நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ, ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும்.” யோவான் 3:36

## நான்காம் படி
**இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்**

“அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்”. யோவான் 1:12
“நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருகாலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை.” யோவான் 10:28
“என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.” யோவான் 5:24

## ஐந்தாம் படி
**இயேசுவானவர் இப்பொழுது உன்னுடைய ஆண்டவரும், நண்பருமாயிருக்கிறார் என்பதை ஒத்துக்கொள்**

“நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்” யோவான் 15:14
“தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.” (யோவான் 20:28)
“இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை: கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்.” (யோவான் 16:24)

## ஆறாம் படி
**இப்பொழுது நீ தேவனுடைய குடும்பமாகிய திருச்சபைக்குச் சொந்தமானவன் என்பதை அறிந்துகொள்.**

வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய